தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 21-11-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## மண் மற்றும் பயிர்களில் பல்லூட்ட மேலாண்மை குறித்த பயிற்சி வேளாண் பல்கலையில் துவக்கம்

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல் துறையில் வேளாண் விரிவாக்க அலுவலர்களுக்கு மண்ணிலும், பயிர்களிலும் பல்லூட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்ய சிறந்த வேளாண் செயல்பாடுகளுக்கான பயிற்சி அகில இந்திய அளவில் இன்று (21.11.2016) துவங்கியது.

நாடு முழுவதுமிருந்து 20 வேளாண் விரிவாக்க அலுவலர்கள் கலந்துகொள்கின்றனர். இந்திய அரசின் வேளாண் அமைச்சகம் சார்பில் நடத்தப்படும் பயிற்சி 21.11.2016 முதல் 28.112016 வரை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. முனைவர் கோ. அருள்மொழிச்செல்வன், பேராசிரியர் மற்றும் தலைவர் விழாவிற்கு வந்தவர்களை வரவேற்றார்.

முனைவர். ப. மலர்விழி, பேராசிரியர் மற்றும் துணைப்பதிவாளர், பயிற்சி மற்றும் பயிற்சியாளர்கள் குறித்து விளக்கினார்.

முனைவர். கி. குமார் தனி அலுவலர், இயற்கை வள மேலாண்மை இயக்குனரகம் தன் வாழ்த்துரையில் மண்வளமே நிலையான வேளாண்மைக்கு அடித்தளம் என்றார். மண் மற்றும் பயிரில் பல ஊட்டச்சத்துக்களின் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள நிலையில் வேளாண் தொழில் நுட்பங்களை விவசாயப் பெருமக்களுக்கு எடுத்துச் செல்வது அவசியம் என்பதை வலியுறுத்தினார். இயற்கை உரங்களோடு இணைந்த பயிருக்கேற்ற சமச்சீர் உர நிர்வாகத்தின் மூலம் அதிக மகசூல் பெறுவதோடு மண் வளத்தையும் பாதுகாக்க முடியும் என்றார்.

பயிற்சி கையேடு வெளியிட்டு, துவக்க விழா உரை நிகழ்த்திய முனைவர் எஸ். மகிமைராஜா முதன்மையர் (வேளாண்மை) தன் உரையில் விரிவாக்க அலுவலர்கள் மூலமே தொழில் நுட்பங்கள் விவசாயிகளுக்கு சென்றடைகின்றன என்றார். பெருகி வரும் மக்கள் தொகைக்கேற்ப அதிக உணவு உற்பத்தி, தொழிற்சாலைக் கழிவுகளால் மண் மற்றும் நீர்வள ஆதாரங்களின் மாசுபாடு போன்ற பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலையில், விரிவாக்க அலுவலர்கள் இதுபோன்ற பயிற்சியின் மூலம் நவீன தொழில் நுட்பங்களை அறிந்து கொண்டு சென்று விவசாயிகளின் முன்னேற்றத்திற்கு உதவ வேண்டும் என்று எடுத்துரைத்தார்.

முன்னதாக முனைவர் கோ. அருள்மொழிச்செல்வன், பேராசிரியர் மற்றும் தலைவர் மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல் துறை வாழ்த்துரையும், முனைவர். தி. சித்தேஸ்வரி, பேராசிரியர், மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல் துறை நன்றியுரையும் வழங்கினர்.

மக்கள் தொடர்பு அலுவலர்